# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 63 — 1973 ජූනි 08 වැනි සිකුරාදා — 1973.06.08

63 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூன் மாதம் 08 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ) — விளம்பரங்கள்

(ஒவ்வொரு தொகுதியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதாக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 545 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 550 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 551 | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஏலவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### *நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சு*

*வெற்றுத்தார்ப்பீப்பாக்கள், வெற்று உருக்குத் தகரங்கள், வெற்று சீமெந்து உறைகளைக் கொள்வனவு செய்து அப்புறப் படுத்தற்கான கேள்விப் பத்திரங்கள்*

*நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகளமைச்சின் பொறியியற் சேவை அமைப்பு, வேலைகள் பணிப்பாளர், வடமேல் மாநிலம், குருநாகல் திணைக்கள கேள்விப்பத்திர சபைத் தலைவர் இலங்கையரிடமிருந்தும், இலங்கைத் தாபனங்களிடமிருந்தும் கீழ்க்காணும் பொருட்களைக் கொள்வனவு செய்து அப்புறப்படுத்தலுக்கான கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்வார்.*

*(1) சாதாரண வெற்றுத் தார்ப்பீப்பாக்கள்.*

*(2) வெற்று உருக்குத் தார்ப்பீப்பாக்கள்.*

*(3) வெற்றுச் சீமெந்து உறைகள்.*

*2. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ம் திகதி காலை 10 மணிக்கு முடிவடையும். அமைச்சின் எந்த ஒரு மாநில காரியாலயத்திலோ அல்லது யாழ்ப்பாணம், பதுளை கச்சேரிகளிலோ, கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- செலுத்தியதற்கான பற்றுச் சீட்டை சமர்ப்பித்தவிடத்து, 1973 ம் ஆண்டு யூன் மாதம் 21 ம் திகதி மாலை 3.30 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். 22.6.73 காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.*

*3. 1.7.73 தொட்டு 31.12.73 வரையிலான ஆறு மாத கால ஒப்பந்தம்.*

*4. மேலும் இது சம்பந்தமான விபரங்களை வடமேல் மாநிலம், குருநாகல் வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*

*டி. வி. ஏ. சேனாரத்ன,*
*வேலைகள் பணிப்பாளர்,*
*வடமேல் மாநிலம்.*

*வேலைகள் பணிப்பாளர் காரியாலயம்,*
*குருநாகல்,*
*25.5.73.*

6–230—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

---

### *முக்கிய அறிவித்தல்*

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

### ஸ்ரீ லங்கா சீனிக் கூட்டுத்தாபனம்

*கந்தளாய் சீனி உற்பத்தித் தாபனத்துக்கு யந்திர உபகரணங்கள்*

ஸ்ரீ லங்கா சீனிக் கூட்டுத்தாபனம் மேற் கூறிய ஸ்தாபனத்துக்கு யந்திர உபகரணங்கள் வாங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோருகின்றது. யந்திர உபகரணங்கள் விலைக்கு வாங்குவதற்கு இந்தியா/இலங்கை கடன் சலுகை (இல. iv)—1971ன் கீழ் நிதி வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் கீழ் கையொப்பமிடுபவரின் காரியாலயம் இல. 651, அல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5ல் 1.6.73ல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
ஸ்ரீ லங்கா சீனிக் கூட்டுத்தாபனம்.

651, அல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-5.

6-262—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

---

### இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

ரத்மலானை வேலைத்தளத்தில் உள்ள 30 தொன் மரக்கட்டை வெட்டுத் துண்டுகளை வாங்கி எடுத்துச் செல்வதற்கான கேள்விப் பத்திரங்களை சபைத் தலைவர், புகையிரதப் பகுதி விண்ணப்பச் சபை, தலைமை அதிபர் காரியாலயம், இ. அ. பு., தபால் பெட்டி 355, ஒல்கட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு 4.7.73 புதன்கிழமை காலை 11.00 மணிவரையும் ஏற்கப்படும்.

2. விண்ணப்பம் செய்ய விரும்புவோர் விண்ணப்பம் செய்வதற்கு முன் தங்களால் இச் சேவையைச் சரிவரச் செய்யமுடியும் என்பதற்குரிய ஆதாரப் பத்திரங்களையும் பொருளாதார நிலைமையைக் குறிக்கும் பத்திரங்களையும் தேவையாயின் கொடுக்க வேண்டும்.

3. மருதானையில் இருக்கும் புகையிரதப் பண்டகசாலை சுப்பிரண்டன் காரியாலத்தில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று, இரண்டு பிரதிகளில் தங்கள் விண்ணப்பத்தை மனுச் செய்யவும்.

4. விண்ணப்பக் கட்டுப்பணம் ரூபா 100/- கட்டிய பற்றுச் சீட்டை ஒப்படைப்போருக்கு, 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் தேதி சனிக்கிழமை மத்தியானம் 12 மணிவரையும் விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்படும். இலங்கைப் புகையிரதப் பகுதி, மருதானை பிரதம கணக்காளர் கந்தோரில் அல்லது கொழும்பு வெளிப் பகுதிக் கச்சேரிகளில் விண்ணப்பக் கட்டுப் பணத்தைக் கட்டலாம்.

5. 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆம் தேதி புதன்கிழமை காலை 11.05 மணிக்கு இலங்கை புகையிரத அதிபர் காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களை உடைக்கும் பொழுது விண்ணப்பம் செய்தோர் சமூகம் அளிக்கலாம்.

6. மருதானையிலுள்ள புகையிரத பண்டகசாலை சுப்பிரண்டன் காரியாலயத்தில் மற்றும் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எம். சரீன்,
தலைமை அதிபருக்காக,
இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி.

கொழும்பு, 15.5.73.

6-184—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

---

இல. 120

### ஆளிப்பலகைகளுக்காக மின்கல அடுக்கு நீக்கல்களை வழங்கல் (எவிமிநேற்றேஸ்)

ஆளிப்பலகைகளுக்காக மின்கல அடுக்கு நீக்கல்களை வழங்குதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விகள், கொழும்பு-1, லோற்றஸ் வீதி, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகம், 5 வது மாடி, எந்திரவியற் பிரிவு, அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் பெரும்பாகக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 4.7.1973 ம் திகதி மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு 1, லோற்றஸ் வீதி, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகம், 5 வது மாடியில் உள்ள பிரதான தொலைத் தொடர்புப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் படிவங்களில் இரட்டைப் படியில் கேள்விப்பத்திரங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். அவரிடமிருந்து சகல விபரங்களும் தகவல்களும் பெற்றுக்கொள்வதுடன் அவரது அலுவலகத்தில் கேள்விப்பத்திரச் சாதனங்களையும் பரிசிலனை செய்து கொள்ளலாம்.

ஒரு அஞ்சல் அலுவலகத்தின் அஞ்சல் அதிபரிடமோ அல்லது கொழும்பு 1, கோட்டை, ம. த. அ. தந்திக் காசாளரிடமோ ரூபா 50/- கேள்விப்பத்திர வைப்புப்பணமாக செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டை பிரதான தொலைத்தொடர்புப் பொறியியலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் கேள்வியாளர்களுக்கு கேள்விப் பத்திரச் சாதனங்கள் 27.6.1973 ஆம் திகதி ந. ப. 12.00 மணி வரை வழங்கப்படும்.

எச். டி. எஸ். எ. குணவர்த்தன,
பிரதான தொலைத்தொடர்பு எந்திரி.

பிரதான தொலைத்தொடர்பு
எந்திரியின் அலுவலகம்,
5 வது மாடி,
அ.தொ.தலைமை அலுவலகம்,
லோற்றஸ் வீதி, கோட்டை,
கொழும்பு-1.

6-266—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

---

### கச்சேரி, மொனருகலை

கீழ்க்கண்ட வேலைக்கான சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மொனருகலை அரசாங்க அதிபரினால் 1973.07.05 ம் திகதி காலை 10 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

(1) கச்சேரி விடுதிகள் பழுதுபார்த்தல்.

(2) மொனருகலை அரசாங்க அதிபரிடமிருந்து 16.06.73 ம் திகதி தொடங்கி 30.06.73 ம் திகதி வரை பெறக்கூடிய கேள்விப் பத்திரங்களில் இணைப்பிரதியில் அனுப்பப்படல் வேண்டும்.

(3) அரசாங்கத்தில் பதிவு செய்த கொன்தராத்துக்காரர்களும் அனுமதிக்கப்பட்ட சங்கங்களும் கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம். எந்த ஒரு கச்சேரி, இலங்கை வங்கிக் கிளையில் கட்டுப்பணமாக ரூபா 25/- கட்டியதற்கு அத்தாட்சியாக பற்றுச்சீட்டு சமர்ப்பித்தால் மட்டும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் கட்டுப் பணம் கட்டத் தேவையில்லை.

(4) கேள்விப் பத்திரங்கள் 05.07.73 ம் திகதி காலை 10 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக மொனருகலை அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும். கவரின் இடது பக்க மேல்மூலையில் "கச்சேரி விடுதிகள் பழுது பார்ப்பதற்கான கேள்விப் பத்திரம்" என்று குறிப்பிடப்படல் வேண்டும். குறிப்பிட்ட நேரத்துக்குப் பின்பு கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(5) கேள்விப் பத்திரங்கள் 05.07.73 காலை 10.05 மணிக்குத் திறக்கப்படும். அத்தருணத்தில் கேள்விக்காரர்கள் பிரசன்னமாக இருக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள், கேள்விப் பணத்தின் ஐந்து வீதத்தை (5%) பிணைப்பணமாகக் கட்டுதல் வேண்டும். அவ்வாறு அறிவித்து ஏழு நாட்களுக்குள் பிணைப் பணம் கட்ட தவறின், கேள்விக் கட்டுப்பணம் அபகரிக்கப்படும்.

(6) செய்த வேலையின் பெறுமதியில் தொண்ணூறு வீதம் (90%) மட்டும் கொடுப்பனவு செய்யப்படும். மிகுதி, வேலை செய்து முடிந்து மூன்று மாதத்திற்குப் பின்பு கொடுக்கப்படும்.

(7) இதுபற்றிய மேலதிக விபரங்கள் மொனருகலை கச்சேரியில் (கிராம பரிபாலன பகுதி) அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். ஜே. சுமனசேகர பண்டா,
அரசாங்க அதிபர், மொனருகலை.

கச்சேரி,
மொனருகலை,
18.05.73.

6-180—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

**கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு**

ாத்தாண்டி, தால்வில் மீனவர் விடமைப்புத் திட்டத்தின் பின் புறமாக 150 கியூப் 9"—12" உடைகல், 15 கியூப் 2" கல் வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1973.06.29 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

1973.06.29 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சமர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிருப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1973.06.27 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எஸ். எம். பி. தொலபிஹில்ல,
கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
08.06.1973.

6-191—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

---

**கடற்றொழில் திணைக்களம்**

கடற்றொழில் திணைக்களத்தின் உடவளவையிலுள்ள நன்னீர் மீன்பிடி நிலையத்தில் கீழ்க்கண்ட வேலைகளுக்கான கேள்விகள் கடற்றொழில் இயக்குநரால் 1973.06.22 ந் தேதி காலை 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) இரு சீமெந்தித் (மீன்) தொட்டிகளை அமைத்தல்.

(2) நீர்ச்சிகரம் ஒன்றை அமைத்தல்.

(3) கிணறு ஒன்று கட்டல்.

(4) ஊர்திச்சாலை ஒன்றை அமைத்தல்.

கேள்விப் பத்திரங்கள், கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் திணைக்களத்தின் தாபனக் கிளையிலிருந்து 1973.06.21 ந் திகதி நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இந்த வேலைகள் ஒவ்வொன்றிற்குமான கேள்வு வைப்புப்பணம் ரூபா 100/- ஆகும். இப்பணம் மீளளிக்கப்படும்.

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3, 1973 மே மாதம்.

6-176—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

---

**சுகாதாரத் திணைக்களம்—மட்டக்களப்புப் பிரிவு**

பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தேவையான ஆட்களும் சேவையும்.**—1973 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1973 டிசம்பர் மாதம் 31 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கு உரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகள் இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து மட்டக்களப்புப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. **(i) கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமதியான வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**(ii) கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம், பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களிலும், எனது அலுவலகத்திலும் கேள்விகள் முடியும் தினத்திற்கு முதல் நாள் நண்பகல் 12 மணி முதல் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக்கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

3. **பெறுமதி விபரங்கள்.**— கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகருக்கோ தெரிவித்தல் வேண்டும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பப்படவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், மட்டக்களப்பு என்ற முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மூலையில் சேவையின் தன்மையையும், இடது பக்க கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரை இடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது என்னிடமோ செயலாளர்/கணக்காளரிடமோ கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் 4 வது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காணபிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப் படிவங்களிலுள்ள சாப்பாட்டுப் "பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்டுள்ள கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை "சி " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றி அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணைவைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையில் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்திற் கைச்சாத்திடவேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்குத் தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டாது.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப் படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. (i) **கேள்விக்காரர்களுக்கு அறிவித்தல்.**—கேள்விக்காரர்களால் குறிப்பிடப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு 3½ அவுன்சு அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ii) குறைக்கப்படாத வீதத்தில் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் அரிசி விநியோகிக்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் விலையின்படி பணம் கொடுத்தல் வேண்டும். நன்கொடையாகவோ, இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தகாரர்களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தகாரரின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தகாரர்கள் பணம் செலுத்துதல் வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் விலை குறைக்கப்படாத அரிசியின் விலைக்குமுள்ள வித்தியாசத்தின்படி ஒப்பந்தகாரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(iii) வேலையாட்கள் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களைக் கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தகாரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :—

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட இன்று போன்று இனமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையும் கழிக்கப்படும்.

(ஆ) அந்தக் கூப்பன்களின் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும். அரிசிக்கு ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தினால் விநியோகிக்கப்படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறவிடப்படும்.

சுகசேவை அத்தியட்சகர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1973 ம் ஆண்டு மே மீ 20 ந் உ.

க. சற்குரு,
சுகசேவை அத்தியட்சகர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

**மேல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை**

| நிலையம் | கேள்வி வைப்புப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விகள் மூடப்படும் திகதி | அண்ணளவான உணவுகளின் அளவு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஊழியர்கட்கு | | | | நோயாளிகட்கு | | | |
| | | | | மீன் | கருவாடு | முட்டை | மரக்கறி | மீன் | கருவாடு | முட்டை | மரக்கறி |
| திருக்கோவில் பிரசவ விடுதி .. | 100 .. | 300 | 23.6.73 மு.ப.. 10 மணி | 168 | 353 | 101 | 564 | 57 | 111 | 55 | 193 |
| நாவற்காடு பிரசவ விடுதி .. | 100 .. | 300 | | 155 | 306 | 152 | 455 | 72 | 150 | 83 | 246 |
| லகுகல பிரசவ விடுதி .. .. | 100 .. | 300 | | 175 | 337 | 167 | 501 | 240 | 516 | 249 | 702 |
| அக்கரைப்பற்று பிரசவ விடுதி .. | 100 .. | 300 | | 135 | 271 | 138 | 414 | 123 | 252 | 129 | 389 |
| மண்டபத்தடி வைத்தியசாலை .. | 100 .. | 300 | | 224 | 448 | 224 | 672 | 336 | 672 | 336 | 1008 |

6–202—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின் மின்சார மடுவத்தியிலுள்ள 187 உபயோகிக்கத்தகாத மின்கல அடுக்குகள் (பற்றறிகள்) விற்பனை செய்வதற்கான கேள்விப் பத்திரங்களை கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தவிசாளர் 1973.06.27 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

1973.06.27 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1973.06.25 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

எஸ். எம். பி. தொலபிஹில்ல,
கப்பற்றுறை ஆணையாளருக்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
08.06.73.

6-282—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

### பொலிசுத் திணைக்களத்திற்கு 2000 இயந்திரத்துப்பாக்கித் தாங்கல்கள் வழங்குதல்

உள்ளூரிலேயே பெற்றுக்கொள்ளக்கூடிய மூலப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட 2000 இயந்திரத்துப்பாக்கித் தாங்கல்களை வழங்குதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, பொலிசுத் தலைமையலுவலகத்தின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1973 ஜூன் மாதம் 29 ம் திகதி காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்களைத் திறப்பதற்காக மேலே குறிப்பிடப்பட்ட நேரத்தில் கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் சமூகமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

3. கொழும்பு 1, பொலிசுத் தலைமையலுவலகத்தில் பொலிசுத் தலைவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் கேள்விப்பத்திரங்கள் அளிக்கப்பட வேண்டும். மாதிரி (சாம்பிள்) இயந்திரத்துப்பாக்கித் தாங்கல்களை சாதாரண அலுவலக நேரங்களில், கொழும்பு 1, பொலிசுத் தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

4. கேள்விப்பத்திர கட்டுப்பணமாக ரூ. 200/- செலுத்தி அதற்குரிய சிட்டையைக் காட்டி 1973 ஜூன் மாதம் 28 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப்பணத்தைப் பொலிசுத் தலைமையலுவலகத்திலாயினும் அல்லது கொழும்புக்கு வெளியே உள்ள எந்தக் கச்சேரியிலாயினும் செலுத்தலாம்.

5. மாதிரிகள் (சாம்பிள்) சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவை கேள்விப் பத்திரங்கள் திறப்பதற்கான நேரத்திற்கு முன்னரே கேள்விப்பத்திர விண்ணப்பதாரின் பெயர், விலாசம் இடப்பட்டு பொலிசுத் தலைமையலுவலகத்தில் கையளிக்கப்படல் வேண்டும்.

6. மேற்கொண்டு விபரங்களை பொலிசுத் தலைவரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ. புஞ்சிம்ஹத்மயா,
பொலிசுத் தலைவருக்காக.

பொலிசுத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1973 மே மாதம்.

6-291—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து கீழ்க்காண்பவற்றை வழங்குவதற்கான கேள்விகளைக் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவர் 1973.6.27 ந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்வார்:

(அ) படிகக்கல் (குவாற்ஸ்) —24 தொன்

(ஆ) தொலமைற் — 2 தொன்

2. மொரட்டுவை, வெலோனவிலுள்ள கைத்தொழில் வேலைக்களத்தில் ஒப்படைப்பதற்குத் தொன் ஒன்றுக்குரிய விலையைக் கேள்விக்காரர்கள் குறிப்பிடுதல் வேண்டும்.

3. 1973.6.27 ந் திகதி காலை 10 மணிக்கு முன் அவரைச் சென்றடையுமாறு எல்லாக் கேள்விகளும் தலைவர், கேள்விச்சபை, சிறு கைத்தொழிற்றிணைக்களம், ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1 என முகவரியிடப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "படிகக் கல்லுக்கும் தொலமைற்றுக்குமுரிய கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

4. 1973.6.27 ந் திகதி காலை 10 மணியின் பின் சிறு கைத்தொழிற்றிணைக்களத்திற் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் பொழுது கேள்விக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(4/37)
சிறுகைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.5.28.

6-283—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

---

### 1973 நிதிவருடத்து இரண்டாவது அரை ஆண்டு காலத்திற்குக் கட்டிடப் பொருட்கள் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்களைப் பற்றிய விபரங்கள்

1973 நிதிவருடத்து இரண்டாவது அரை ஆண்டு காலத்திற்கு அநுராதபுரம், குருநாகல், திரிகோணமலை, புத்தளம் மாவட்டங்களுக்குக் கீழ் இயங்கும் திணைக்கள வேலைத்திட்டங்களுக்கும் புதிதாக நிறுவப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கும் கட்டிடப் பொருட்கள் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள், அநுராதபுரம் காணி அபிவிருத்தி அதிகாரியினால் 1973.06.28 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**அநுராதபுர மாவட்டம் :**—பதவிய, இராஜாங்கனை வலது கரை, மஹாகனந்தராவ, மஹாவிலச்சிய, ஏதாகட, கெபிட்டிகொல்லாவ, மதவாச்சி மற்றும் வேலைத்தளங்களுக்கு.

**குருநாகல் மாவட்டம் :**—இராஜாங்கனை இடதுகரை, ஹக்வட்டுனு ஓய, மற்றும் வேலைத்தளங்களுக்கு.

**திருகோணமலை மாவட்டம் :**—வான் எல, அல்லை மற்றும் வேலைத் தளங்களுக்கு

**புத்தளம் மாவட்டம் :**—கிவுல்கெலே மற்றும் வேலைதளங்களுக்கு

**கட்டிடப் பொருட்கள் :**—

(அ) இணக்கிடுகு (பிரமாணம் 7′ நீளம் 18″ அகலத்திற்குக் குறைவாக இருத்தல் கூடாது) 1000 க்கு.

(ஆ) நீற்றுச் சுண்ணம்பு :—1 புசலுக்கு (நிறை 44 இருத்தலுக் குறைவாக இருத்தல் கூடாது).

(இ) சுட்ட சுண்ணம்பு—1 புசலுக்கு.

(ஈ) கருங்கல் 6″×9″—1 கியூப்புக்கு.

(உ) கருங்கல் 6″×4″—1 கியூப்புக்கு.

(ஊ) கருங்கல் 5″×4″—1 கியூப்புக்கு.

(எ) சல்லிக்கல் 2″ —1 கியூபுக்கு

(ஏ) சல்லிக்கல் 1½″—1 கியூப்புக்கு

(ஐ) சல்லிக்கல் 1″ —1 கியூப்புக்கு

(ஒ) சல்லிக்கல் ¾″—1 கியூப்புக்கு

(ஓ) சல்லிக்கல் ½″—1 கியூப்புக்கு

(ஔ) சுட்டசெங்கல் (8¾″×4½″×2¾″) 1000 க்கு

(ஃ) ஆற்று மணல்—1 கியூப்புக்கு

விநியோகிப்பதற்கான விலைகள் வெவ்வேறாக குறிப்பிடல் வேண்டும். (அ) தயாரிக்கும் இடத்தில் (தயாரிக்கும் நிலையம் திணைக்கள லொறி வண்டிகள் போகக் கூடியதாக, வேலை நடைபெறும் இடத்திற்கு 5 மைல் தூரத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்). (ஆ) வேலைத்தலத்தில், ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விதாரர், தன் வாகனங்களின்மூலம் விநியோகிக்க (அடுக்குதல், ஏற்றுதல், இறக்குதல், உட்பட) வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு முன் இவ்வலுவகத்திலோ அல்லது ஒரு கச்சேரியிலோ ரூபா 50.00 வீதம் ஒவ்வொரு மாவட்டத்திற்கு வைப்புப்பணம் கட்டி அதற்கான பற்றுச்சீட்டு சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1973.06.26 நண்பகல் 12.00 மணிவரை விநியோகிக்கப்படும்.

இக்காரியாலயத்திலிருந்து கிடைக்கப் பெற்ற கேள்விப்பத்திரங்கள் யாவும் "..........................................மாவட்டத்திற்குக் கட்டிடப் பொருட்கள் கொடுப்பதற்கான கேள்வி" என தபாலுறையின் இடது புற மூலையில் குறிப்பிடப்பட்டு, முத்திரை இடப்பெற்று, காணி அபிவிருத்தி அதிகாரி, அநுராதபுரம் என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்; அல்லது இதற்கென இக்காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 1973.06.28 நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாகப் போடப்படல் வேண்டும்.

அநுராதபுரம், காணி அபிவிருத்தி அதிகாரியின் காரியாலயத்தில் 1973.06.28 ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் சமூகம் அளிக்க அனுமதிக்கப்படுவர்.

இத்திணைக்களத்தால் வெடிமருந்து கொந்தராத்துக்காரருக்கு விநியோகிக்கப்படமாட்டாது. ஆனால் தேவை ஏற்படின், வெடிமருந்து பெறப்பட்டு, கல்வெடித்தல் இத்திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் நடத்த ஒழுங்குகள் செய்யப்படலாம். கொந்தராத்துக்காரர் கல்துளைத்தல், வெடித்தல் மற்றும் இது சம்பந்தமான அவசிய ஏற்பாடுகளைச் செய்வதுடன், இவ்வொழுங்குகளுக்கும், கல் வெடித்ததினால் ஏற்படும் பொறுப்புக்கள், நஷ்டங்கள், முதலியவற்றிற்கு முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். காணி அபிவிருத்தித் திணைக்களத்தின் வேலைத்திட்டத்திற்கும், சௌகரியத்திற்கும் அமைய இத்திணைக்களத்தினால்

நியமிக்கப்படும் நேரங்கள், நிபந்தனைகளுக்கு அமைவாய் கொந்தராத்துக்காரர் கல்வெடிப்புக்கான ஒழுங்குகள் செய்வதுடன், அநுராதபுரம் காணி அபிவிருத்தி அதிகாரியினால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரால் நியமிக்கப்பட்ட நேரங்கள், திகதிகளில் கல் உடைப்புக்கான ஒழுங்குகள் கொந்தராத்துக்காரால் செய்து முடிக்கப்பட்டிருத்தல் வேண்டும். கல் உடைப்பு முடிந்து 1 வார கால எல்லையுள் இத்திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட விகிதத்தின் பிரகாரம் பாவிக்கப்பட்ட வெடிமருந்தின் தொகைக்கேற்ப கருங்கல், சல்லிக்கல் முதலானவை கொந்தராத்துக்காரரால் ஒப்படைக்கப்படல் வேண்டும். பாவிக்கப்பட்ட வெடிமருந்தின் பெறுமதி கொந்தராத்துக்காரரிடம் இருந்து அறவிடப்படும்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விதாரர், ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து ஒரு வாரத்திற்குள் அநுராதபுரம், காணி அபிவிருத்தி அதிகாரியுடன் ஓர் ஒப்பந்தத்திற்கு உட்படல் வேண்டும். காணி அபிவிருத்தி அதிகாரி கோரும் நாளிலிருந்து ஒரு வாரகால எல்லையுள் பொருட்களைக் கொடுத்தல் வேண்டும். இக்கால எல்லையுள் கட்டிடப் பொருட்கள் விநியோகிக்கத் தவறினால் அல்லது ஒப்பந்தத்தில் உட்பட மறுத்தால் அல்லது தவறினால் அவர் தவறிய ஒப்பந்தக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் தமது வைப்புப் பணத்தையும் இழக்க நேரிடும்.

ஏதாவது ஒரு கேள்வியை அல்லது எல்லாக் கேள்விகளையும் அல்லது ஓர் கேள்வியின் எந்தப் பகுதியையும் எதுவித காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை அநுராதபுரம், காணி அபிவிருத்தி அதிகாரி தன்னகத்தே கொண்டுள்ளார்.

மேலதிக விபரங்கள் வேண்டின், அநுராதபுரம், காணி அபிவிருத்தி அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. சண்முகராஜா,
காணி அபிவிருத்தி அதிகாரி.

காணி அபிவிருத்தி அலுவலகம்,
அநுராதபுரம்,
73.05.28.

6-278—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

(கொழும்பு லக்சலவிலிருந்து பொருட்கள் கொண்டு செல்வதற்கான கேள்வி)

கொழும்பு லக்சலவிலிருந்து கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள இடங்கட்கும் வியாங்கொடை, திவுலப்பிட்டிய, ஜா-எல, பன்னிப்பிட்டிய கூட்டுறவுச் சமாசங்கட்கும் பொருட்கள் கொண்டு செல்வதற்குரிய கேள்விகளை 1973.6.28 காலை 10 மணிவரை கொழும்பு கேள்விச்சபைத் தலைவர் ஏற்றுக் கொள்வார். கீழ்க் காணும் முறையிற் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :

கொழும்பு மாநகர சபை எல்லை

(அ) 8 மணித்தியாலங்கள் கொண்ட நாளொன்றுக்கு லொறியொன்றிற்கு அறவிடப்படும் வீதம் -ரூபா
(ஆ) 4 மணித்தியாலங்கள் கொண்ட நாளொன்றுக்கு லொறியொன்றிற்கு அறவிடப்படும் வீதம் -ரூபா
(இ) செல்லும் மைலொன்றுக்கு அறவிடப்படும் வீதம் - ரூபா
(ஈ) தாமதக் கட்டணங்கள் - ரூபா
(உ) லொறியின் நிறை

கூட்டுறவுச் சமாசங்கள்

(அ) செல்லும் மைலொன்றுக்கு அறவிடப்படும் வீதம் - ரூபா
(ஆ) லொறி வெறுமையாகத் திரும்பிவரின், சென்று திரும்பும் மைலொன்றுக்கு அறவிடப்படும் வீதம் -ரூபா
(இ) தாமதக் கட்டணங்கள்
(ஈ) லொறியின் நிறை

2. எல்லாக் கேள்விகளும் 1973.06.28 காலை 10 மணிக்கு முன் அவரை வந்தடையுமாறு தலைவர், கேள்விச்சபை, சிறுகைத் தொழிற்றிணைக்களம், ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1 என முகவரியிடப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கொழும்பு லக்சலவிலிருந்து பொருட்கள் கொண்டு செல்வதற்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

3. 1973.6.28 காலை 10 மணியின் பின் சிறு கைத்தொழிற்றிணைக் களத்திற் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையிற் கேள்விக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

சோமபால குணதீர,
சிறுகைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(5/49)
சிறுகைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973 ம் ஆடு மே மீ 29 ந் உ.

6-284—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

---

## கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

### பொலிசுத் திணைக்களம்

500 கவசத் தொப்பிகள் வழங்குதல்—முடிவு திகதி 3.4.1973. 1973 மார்ச்சு மாதம் 9 ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியால் அறிவிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் சம்பந்தமாக 2 கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்களால் மொத்தம் 2 விலைகள் சமர்ப்பிக்கப்பட்டன. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பதாரரின் விபரம் பின்வருமாறு :

ஆமி அன்ட் நேவி ஸ்ரோர்ஸ்,
27, ஆஸ்பத்திரி வீதி,
கொழும்பு 1.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை கவசத் தொப்பி ஒன்றுக்கு ரூ. 114.00

ஜீ. புஞ்சிமஹத்மயா,
பொலிசுத் தலைவருக்காக.

பொலிசுத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1973, மே மாதம் 26 ம் திகதி.

6-292—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

---

### பொலிசுத் திணைக்களம்

6000 சங்கிலிகளோடு கூடிய விசில்களும், 5000 இடுப்புப் பட்டித் தகடுகளும் வழங்குதல்—முடிவு திகதி 1973.3.30. 1973 மார்ச்சு மாதம் 9 ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட 6000 சங்கிலிகளோடு கூடிய விசில்கள் சம்பந்தமாக 5 கேள்விப் பத்திர விண்ணப்பதாரர்களால் மொத்தம் 5 விலைகள் சமர்ப்பிக்கப்பட்டன. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பதாரரின் விபரம் பின்வருமாறு :

எம். எம். அன்சார் மொஹிடீன்,
2, ஒபர்ன்சயிட்,
தெஹிவளை.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை—சங்கிலிகளோடு கூடிய விசில் ஒன்றுக்கு ரூ. 13.25

5000 இடுப்புப்பட்டித் தகடுகள் சம்பந்தமாக எவருடைய விலையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

ஜீ. புஞ்சிமஹத்மயா,
பொலிஸ் மா அதிபருக்காக.

பொலிசுத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1973, மே மாதம் 26 ம் திகதி.

6-302/1—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

பொலிசுத் திணைக்களம்

1000 பெரே தொப்பிகள் வழங்குதல்—முடிவு திகதி 30.3.1973. 1973 மார்ச்சு மாதம் 9 ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியால் அறிவிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயம் சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

ஜீ. புஞ்சிமஹத்மயா,
பொலிசுத் தலைவருக்காக.

பொலிசுத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1973, மே மாதம் 26 ம் திகதி.

6-302/2—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## தகவற் பகுதி

### உபயோகிக்கத் தகாத பொருட்களின் ஏல விற்பனை

கீழ்க்காணும் உபயோகிக்கத் தகாத பொருட்கள் 18.06.1973 ம் திகதியன்று, காலை 10 மணிக்கு இல. 7, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 1 இல் உள்ள தகவற் பகுதியில், பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

1. மோட்டார் வாகன பழைய ரயர்கள்—75 (எல்லா அளவுகளும்)
2. மோட்டார் வாகன பழைய ரியூப்கள்—50 (எல்லா அளவுகளும்)

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் முழுப் பணத்தையும் உடனே செலுத்த வேண்டியதுடன், விற்பனைத் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னராக சகல பொருட்களையும் அகற்றுதலும் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

விற்பனை நடைபெறும் திகதிக்கு முன்னர் 3 நாட்களுக்குள், மேற்குறிப்பிட்ட முகவரியில் பொருட்கள் பார்வைக்கு வைக்கப் படும்.

தகவல் அதிபதி.

தகவற் பகுதி,
கொழும்பு 1,
23.05.73.

6-290—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

## சுங்க விற்பனை

பாவனையில் இருந்த 25 ஸ்ரீ 2756 இலக்கமுடைய உழவு இயந்திரமும் 55 ஸ்ரீ 4502 இலக்கமுடைய பெட்டியும் 1973 ம் ஆண்டு ஆனி மாசம் 19 ம் திகதி காலை 9.30 மணிக்கு வவுனியாக் கச்சேரியில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை முடிவில் ஏலத்தில் கடைசியாகக் கூறப்படும் தொகையில் 50 வீதத்தை உடனடியாகக் கட்டவேண்டும்.

ஏலத்தில் இவைகளை வாங்குவோர் ஏலவிற்பனை செய்த திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் மிகுதிப் பணத்தைச் செலுத்தி மீட்கத் தவறினால் அவைகளை திரும்பவும் ஏலத்தில் விற்பனை செய்யப்படுவதுடன் கட்டப்பட்ட முற்பணமும் பறிமுதல் செய்யப்படும்.

1954 ம் ஆண்டு மே மாதம் 28 ம் திகதி பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் உள்ள விதிகளுக்கமைய விற்பனை நடைபெறும்.

எல். பி. விக்கிரமாராச்சி.
சுங்க கலக்டர்,
வவுனியா மாவட்டம்.

கச்சேரி,
வவுனியா, 29.5.73.

6-304—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

## அரசாங்க விநியோகத் திணைக்களம்

1973 ம் ஆண்டு ஜூன் மாதம் 27 ந் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கொழும்பு 2 சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள அரசாங்க விநியோகத் திணைக்களத்தில் 20 மோட்டார் வாகனங்கள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். வாகனங்களை மேற்குறிப்பிட்ட நிலையத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களை அரசாங்க விநியோகத் திணைக்களப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். ஏ. ரூபசிங்க,
அரசாங்க விநியோகத்
திணைக்களப் பணிப்பாளர்.

கொழும்பு 2,
23.5.73

6-281—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

## பொருட்களின் விற்பனை

மீண்டகடித அலுவலகத்தில் உரிமை கோரப்படாத தபால் பைக்கெட்டுகளில் காணப்பட்ட பொருட்கள் கொழும்பு, விஜயவர்த்தன மாவத்தை, மத்திய தபால் மாற்று நிலையத்தில் உள்ள மீண்டகடித அலுவலகத்தில் 1973 யூன் 14 ம் திகதி வியாழக்கிழமையன்று மு.ப. 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

நியாயமான விலை கோரப்பெறாத எந்த விடயமும் விற்பனையிலிருந்து நிறுத்திவைக்கப்படும். கூடிய விலையைக் கோரி வெற்றியீட்டியவர் தொகையை உடனடியாகக் காசாக இறுத்து அதே நாளன்று பொருளை அப்புறப்படுத்தல் வேண்டும்.

யே. எச். பீ. குருகே,
அஞ்சல் அதிபர் நாயகமும்
தொலைத் தொடர்பு அதிபருக்குமாக.

அஞ்சல் பிரிவு,
அ. தொ. தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு மே மீ 23 ந் உ.

| தொடர் இல. | | பொருட்களின் விவரம் |
|---|---|---|
| 1 | .. | ஒரு அந்தர் பழைய புதினப்பத்திரிகை |
| 2 | .. | ஷை |
| 3 | .. | அரை அந்தர் பழைய புதினப்பத்திரிகை |
| 4 | .. | 40 இருத்தல் கொண்ட பாவனைக்குதவாத புதியதாள் 40 பைகள் |
| 5 | .. | ஷை |
| 6 | .. | ஒரு கட்டு 100 ஆங்கில சஞ்சிகைகள் |
| 7 | .. | ஷை |
| 8 | .. | ஷை |
| 9 | .. | ஷை |
| 10 | .. | ஷை |
| 11 | .. | ஷை |
| 12 | .. | ஷை |
| 13 | .. | ஷை |

| தொடர் இல. | | பொருட்களின் விபரம் |
|---|---|---|
| 14 | .. | ஒரு கட்டு 100 ஆங்கில சஞ்சிகைகள் |
| 15 | .. | ஷை |
| 16 | .. | ஷை |
| 17 | .. | ஷை |
| 18 | .. | ஷை |
| 19 | .. | ஒரு கட்டு 100 தமிழ் சஞ்சிகைகள் |
| 20 | .. | ஒரு கட்டு 100 வைத்திய வெளியீடுகள் (ஆங்கிலம்) |
| 21 | .. | ஒரு கட்டு 100 சமய சஞ்சிகைகள் (ஆங்கிலம்) |
| 22 | .. | ஒரு கட்டு 100 சீனச் சஞ்சிகைகள் (ஆங்கிலம்) |
| 23 | .. | ஷை |
| 24 | .. | ஷை |
| 24 | .. | ஷை |
| 25 | .. | ஷை |
| 26 | .. | ஷை |
| 27 | .. | ஷை |
| 28 | .. | ஷை |
| 29 | .. | ஷை |
| 30 | .. | ஒரு கட்டு 100 எந்திரவியல் சஞ்சிகைகள் (ஆங்கிலம்) |
| 31 | .. | ஒரு கட்டு 100 தமிழ் கலைமகள் (பழைய பிரதிகள்) |
| 32 | .. | ஷை |
| 33 | .. | ஒரு கட்டுப் பட்டியல்கள் (ஆங்கிலம்) |
| 34 | .. | ஒரு கட்டு 100 சீனப் புத்தகங்கள் (பாலர்) ஆங்கிலம் |
| 35 | .. | ஷை |
| 36 | .. | ஷை |
| 37 | .. | ஷை |
| 38 | .. | ஷை |
| 39 | .. | ஷை |
| 40 | .. | ஷை |
| 41 | .. | ஷை |
| 42 | .. | ஷை |
| 43 | .. | ஷை |
| 44 | .. | ஷை |
| 45 | .. | ஷை |
| 46 | .. | ஷை |
| 47 | .. | 30 பக்கெட்டுச் சீனு பட அஞ்சல் அட்டைகள் |
| 48 | .. | 25 ரீடேஸ் டைஜெஸ்ற் (பிந்திய பிரதிகள்) |
| 49 | .. | ஷை |
| 50 | .. | ஷை |
| 51 | .. | ஷை |
| 52 | .. | " லூசும் " இன் தேர்ந்தெடுத்த கதைகள் 10 புத்தகங்கள் |
| 53 | .. | ஷை |
| 54 | .. | ஷை |
| 55 | .. | ஷை |
| 56 | .. | ஷை |
| 57 | .. | 100 சீன பிளாஸ்ரிக் ஒலித்தட்டுக்கள் |
| 58 | .. | ஷை |
| 59 | .. | ஷை |
| 60 | .. | ஷை |
| 61 | .. | ஷை |
| 62 | .. | 5 தேசிய பூகோளச் சஞ்சிகைகள் (பழைய பிரதிகள்) |
| 63 | .. | ஷை |
| 64 | .. | அவுஸ்திரேலியாவின் வனப்பு ஒரு புத்தகம் |
| 65 | .. | இரு முத்திரை அல்பம் |
| 66 | .. | 4 புத்தகம்–நியூக்கிளியர் பௌதிகம்–றேடியோலொஜி, றேடியோ பையோலொஜிக்கல் சம்பந்தமாக |
| 67 | .. | 4 சிங்களப் புத்தகங்கள் |
| 68 | .. | 4 ஆங்கிலப் புத்தகங்கள் |
| 69 | .. | 39 சங்கீதப் புத்தகங்கள் |
| 70 | .. | 6 மாதிரிப் பட்டியல் புத்தகங்கள் |
| 71 | .. | ஏறக்குறைய 20,000 பாவனை செய்த முத்திரைகள் |
| 72. | | ஷை |
| 73 | .. | ஷை |
| 74 | .. | ஷை |
| 75 | .. | ஷை |
| 76 | .. | ஷை |
| 77 | .. | ஷை |
| 78 | .. | ஷை |
| 79 | .. | ஷை |
| 80 | .. | ஒரு பெரிய குடை |
| 81 | .. | ஒரு பெண்கள் குடை |
| 82 | .. | ஒரு சேட்—இரு ஸ்காவ்ஸ்–ஒரு கால்சட்டை |
| 83 | .. | இருபெனியன்–ஒருசாறம்–ஒருகன்வஸ் தொப்பி |
| 84 | .. | ஒருசோடி லேடீஸ் ஸைர்ற், நான்கு கைக்குட்டைகள், சிப்பியினால் செய்யப்பட்ட மாலை |
| 85 | .. | பாவித்த துணி (11 துண்டுகள்), சேதமுற்ற பிளாஸ்ரிக் உறைகள், இரு பாவனைசெய்த காசுப்பை. |
| 86 | .. | இருசோடி கண்ணாடிகள் |
| 87 | .. | ஒரு குளிர் கண்ணாடி |
| 88 | .. | எட்டு, 1973 தினப்பதிவேடு, ஒரு பொம்மை (சேதமடைந்த) ஒரு வானொலி விளக்கப்படம் (பித்தளை) |
| 89 | .. | பத்து 1973 தினப்பதிவேடுகள் |
| 90 | .. | ஷை |
| 91 | .. | ஷை |
| 92 | .. | ஷை |
| 93 | .. | ஐந்து 1972 தினப்பதிவேடுகள் |
| 94 | .. | இருதுண்டு சில்க்துணி |

6-182—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினுல்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| யூன் | .. | 1.6.73 | வெள்ளி | .. | 23.5.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 8.6.73 | வெள்ளி | .. | 30.5.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 14.6.73 | வியாழன் | .. | 6.6.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 22.6.73 | வெள்ளி | .. | 13.6.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 29.6.73 | வெள்ளி | .. | 20.6.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ௵ ஓகத்து ௴ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.